विधिर्वन्द्यः सोपि प्रतिनियतकर्मैकफलदः ।
फलं कर्मायत्तं किममरगणैः किं च विधिना
नमस्तत्कर्मभ्यो विधिरपि न येभ्यः प्रभवति ॥

93 அண்டமாம் பிண்டத்து உட்புறத் திருந்து
ஒண்டிறற் பிரமன் குயவனாய் உழைத்துளன்;
காக்குங் கடவுளும் கடலினுட் டங்குவோன்;
நோக்கிப் பத்தவ தாரம் நிகழ்த்துவோன்;
மண்டையோட் டுடனே மகிமைசேர் சிவனும்
அண்டமெ லாமுழன் றலைவன் பிச்சையாய்
பானுவாம் வெங்கதிர் பகர்விதிக் கொடுமையால்
வானெலாந் தினந்தொறும் வருவன் சுழன்று
வினையின் வலிமையே விளைத்ததிக் கதிகளை;
வினைவல் லமைக்கே விழுப்பஞ் செலுத்துவோம்.

ब्रह्मा येन कुलालवन्नियमितो ब्रह्माण्डभांडोदरे
विष्णुर्येन दशावतारगहने क्षिप्तो महासङ्कटे ।
रुद्रो येन कपालपाणिपुटके भिक्षाटनं सेवते
सूर्यो भ्राम्यति नित्यमेव गगने तस्मै नमः कर्मणे ॥ ९३ ॥

94 நல்லோ னேகேள் நற்பய னடைய
பொல்லோர் தமையும் புண்ணிய ராக்கும்.
நல்லதாம் விழுச்செயல் வணங்குவாய் நலம்பெற;

கல்லார் தமையும் கற்றவ ராக்கும்;
பொல்லாப் பகைவரும் பொருந்துவர் நண்பராய்
புலப்படா வற்றைப் புலப்படச் செய்யும்
கடல்படு நஞ்சைக் கிளரமு தாக்கும்;
இடர்தமை விளக்கும் இயல்புகள் கடிக.

या साधूंश्च खलान् करोति विदुषो मूर्खान् हितान् द्वेषिणः
प्रत्यक्षं कुरुते परोक्षममृतं हालाहलं तत्क्षणात् ।
तामाराधय सत्क्रियां भगवतीं भोक्तुं फलं वाञ्छितं
हे साधो व्यसनैर्गुणेषु विपुलेष्वास्थां वृथा माकृथाः ॥ ९४ ॥

95 நற்செயற் பயன்கள் நணுகுறுங் காறும்
விற்செறி யரண்மனை, விழைவுறும் சிறுமிகள்,
ஒள்ளிய வெண்குடை யுயர்நிழ லரசு
தெள்ளிய இன்பெலாம் தானாய் வந்துறும்;
நல்வினைத் தொடர்கள் நைந்திட்ட வைவேல்
புல்லும் இன்பச் சரடது புரைபடும்.
அன்புறு காதலார் அணுகாப் பகைவராய்
இன்ப முத்தாரம் இற்றுச் சிதறல்போல்
பற்பல நற்பொருள் பலவழி அகலும்
இற்பொருள் சுற்றம் இவையெலாம் மறையும்.

शुभ्रं सद्म सविभ्रमा युवतयः श्वेतातपत्रोज्ज्वला
लक्ष्मीरित्यनुभूयते चिरमनुस्यूते शुभे कर्मणि ।
विच्छिन्ने नितरामनङ्गकलहक्रीडात्रुटत्तन्तुकं
मुक्ताजालमिव प्रयाति झटिति भ्रश्यद्दिशोऽदृश्यताम् ॥ ९५ ॥

96 எச்செயல் செயினும் எண்ணிச் செயல்நலம்
அச்செயற் பயன்களை ஆய்ந்தறிந் தியற்றுக.
அவசர அடியாய் அமைந்திடும் அலுவல்
சிவப்பாம் தணலெனச் செதுக்குறும் நெஞ்சை.

गुणवदगुणवद्वा कुर्वता कार्यमादौ
परिणतिरवधार्या यत्नतः पण्डितेन ।
अतिरभसकृतानां कर्मणामाविपत्ते-
र्भवति हृदयदाही शल्यतुल्यो विपाकः ॥ ९६ ॥

97 செயல்நிறை வாகச் செறிந்த இவ்வுலகில்
செயல்செயும் சுழலில் சேர்ந்துழல் ஒருவன்
உய்யும் வழியாம் உயர்தவ மிகந்தால்
பெய்யம் எள்ளை நெல்லெனச் சமைப்பவன்
தாழ்வாம் விளைபொருள் தழைத்தற் பொருட்டு
மேலாம் புண்டம் மிக அழிப் பவனும்.

स्थाल्यां वैडूर्यमय्यां पचति तिलखलं चान्दनैरिन्धनौघैः
सौवर्णैर्लाङ्गलाग्रैर्विलिखति वसुधामर्कतूलस्य हेतोः ।
छित्वा कर्पूरखण्डान् वृतिमिह कुरुते कोद्रवाणां समन्तात्
प्राप्येमां कर्मभूमिं न भजति मनुजो यस्तपो मन्दभाग्यः ॥ ९७ ॥

98 உருவத் தொழில்நலம் உயர்குடிப் பிறப்பு
திருத்தமாம் நன்னடை தீர்புரைக் கல்வி
ஆய்ந்துணர்ந் தியற்றும் அறிஞர் பாற்றொண்டு
வாய்ந்த இவ்வியாவையும் வளந்தரல் சிறிதே;
நட்ட நன்மரம் நாட்செல் வதனுல்
உற்ற நற்கனியை உகந்தே தரல்போல்
முற்பிறப் பவைகளில் முயன்றுசேர் நற்பயன்
இப்பிறப் பதனில் ஈந்திடும் நலமே.

नैवाकृतिः फलति नैव कुलं न शीलं
विद्यापि नैव न च यत्नकृतापि सेवा ।
भाग्यानि पूर्वतपसा खलु सञ्चितानि
काले फलन्ति पुरुषस्य यथैव वृक्षाः ॥ ९८ ॥

99 ஆர்கலி ஓடினும் மேருமுக டேறினும்
போர்க்க ளந்தனிற் பகைவரை வெல்லினும்
வாணிபம் பயிர்த்தொழில் வளமாய்க் கற்கினும்
பன்னும் பல்கலை பயின்று பறவைபோல்
அகல்வா னத்தில் ஆரப்ப றக்கினும்
புகல்முற் செயலால் பூதலந் தன்னில்
நிகழ விதித்தது நீங்குத லிலையே
வகுத்தான் வகுத்த வகைமா றுறுமோ?

मज्जत्वम्भसि यातु मेरुशिखरं शत्रून् जयत्वाहवे
  वाणिज्यं कृषिसेवनादि सकला विद्याः कलाः शिक्षताम् ।
आकाशं विपुलं प्रयातु खगवत्कृत्वा प्रयत्नं परं
  नाभाव्यं भवतीह कर्मवशतो भाव्यस्य नाशः कुतः ॥ ९९ ॥

100 காடு போர்க்களம் கதழெரி பகைக்குழு
ஆடுநீர் நடுக்கடல் ஓங்குதலை மலையே
தூக்கம் களிமயல் துன்புறும் இறுநிலை
ஊக்கிய முன்னறம் உயிர்காத் திடுமே.

वने रणे शत्रुजलाग्निमध्ये महार्णवे पर्वतमस्तके वा ।
सुप्तं प्रमत्तं विषमस्थितं वा रक्षन्ति पुण्यानि पुराकृतानि ॥ १०० ॥

101 முற்செய் நன்மை முதிரறி வோர்க்கு
முற்றுல கெங்கணும் நிதிமணி நிறைந்ததாம்
அஞ்சத் தகுங்கான் அம்பே ரூராம்
எம்மா னிடரும் தம்மவர் ஆவரே.

நீதி சதகம் முற்றிற்று.

भीमं वनं भवति तस्य पुरं प्रधानं
  सर्वो जनः स्वजनतामुपयाति तस्य ।
कृत्स्ना च भूर्भवति सन्निधिरत्नपूर्णा
  यस्यास्ति पूर्णसुकृतं विपुलं नरस्य ॥ १०१ ॥

भर्तृहरिनीतिशतकं संपूर्णम् ॥

உடம்பு திடமுண்டாகும். ஆமவாதம் தீரும். நிராம வாதங்களும் தீரும்.

ஆவரண வாதம் 24ன் பெயர்கள்

பித்தாவரண வாதம்	சிலேத்மாவரண வாதம்
இரத்தாவரண வாதம்	மாங்கிஷாவரண வாதம்
மேதாவரண வாதம்	அத்தியாவ்ரண வாதம்
மஜ்ஜாவரண வாதம்	சுக்கிலாவரண வாதம்
அன்னுவரண வாதம்	மூத்திராவரண வாதம்
மலாவரண வாதம்	சர்வதாவரண வாதம்
பிராண பித்தாவரண வாதம்	உதான பித்தாவரண வாதம்
வியானபித்தாவரணவாதம்	சமானபித்தாவரண வாதம்
அபான பித்தாவரணவாதம்	பிராண சிலேத்மாவரணவாதம்
உதானுவரண வாதம்	வ்யானுவரண வாதம்
சமானுவரண வாதம்	அபான சிலேத்மாவரணவாதம்
பிராண உதானுவரணவாதம்	சங்கிரகாவரணவாதம்

என்பன.

மருந்து முறைகள்

சீர்பெரும் அஷ்டவர்க்கந் தசமூலம் கரஞ்சமாயில்
ஏர்பெரு கோட்டமிந்து யெருக்கம்வேர் சித்தாமுட்டி
பார்புகழ் வீழிவேலிப் பருத்தியா மணக்கின் மூலம்
பேர்பெறு முதிரை மாடம் பெருங்காயங் குப்பைமேனி (41)

சதகுப்பை குருஞ்சி மஞ்சள் தகரி நெய்த் தகரம் போளம்
இதமுறு சவுரிக் கொத்து யிலந்தைக் காரகில் நிர்குன்றி
பதமுறு தூதிவித்துப் பரியசாறடை வேர்த் தூப
மதமுறு குக்கில் கள்ளி மணமுன்னேச் சதுரக்கள்ளி (42)

எண்ணெய்செம் புளிச்சங்கட்டை யிதம்பெறுமுவாய் சமூலம்
நண்ணிய மருந்தாமன்பத் தொன்றுமே நவிலுங்காலே
மண்ணுளோர் தனக்கு வந்த வாதரோகங் கடன்னிற்
றிண்ணியா வரணவாத [1]மிருபத்து மூன்றுந்தீரும் (43)

(இ-ள்) 1. அஷ்டவர்க்கம் என்று சொல்லும்படியான மேதா, மஹாமேதா, காகோலி, க்ஷீரகாகோலி, ருஷபகம், ஜீவகம், ருத்தி, வ்ருத்தி என்ற சரக்குகள்.

---

1. "மிருபத்து நான்குந் தீரும்" என்றிருத்தல் வேண்டும்.

2. தசமூலம் என்ற வில்வம், குமிழ், பாதிரி, வாகை, சிறுமுன்னை, பெருமுன்னை, நெருஞ்சில், கத்திரி, முள்ளுக்கத்திரிவேர், சிறுகுமிழ் என்ற 10 வகைச் சரக்குகள்.

3. புங்கம் வேர்
4. ஆயில்யப்பட்டை
5. கோஷ்டம்
6. இந்துப்பு
7. எருக்கம் வேர்
8. சித்தாமுட்டிவேர்
9. வீழிவேர்
10. வேலிப்பருத்தி வேர்
11. ஆமணக்கம் வேர்
12. முதிரை, மாடம் (அவரை, உளுந்து முதலியன)
13. பெருங்காயம்
14. குப்பைமேனி
15. சதகுப்பை
16. குருஞ்சி
17. மஞ்சள்
18. வெள்ளாட்டு நெய்
19. தகரை
20. போளம்
21. சவுரி
22. கொத்தான்
23. இலந்தை
24. அகில்கட்டை
25. கருநொச்சி
26. தூதிவித்து
27. சாறடை வேர்
28. குக்கில்
29. கள்ளி
30. முன்னை
31. சதுரக்கள்ளி
32. நல்லெண்ணெய்
33. செம்புளிச்சை
34. உகாய் சமூலம்
35. சாம்பிராணி.

ஆக இந்த 51 சரக்குகளையும் ஆவரண நோய்களுக்குத் தக்கபடி தேர்ந்தெடுத்துப் பிரயோகிக்கவும். 23 வகை ஆவரண வாதங்களும் குணமாகும்.

அனலெரி வாதத்திற்கு

வாய்ந்திடும் பூதிகாதிக் கிருதத்தி னுலுமாகு
மேய்ந்திடுங் கும்பசாக மேகாதசமூல மேது
தோய்ந்திடத் தீருமன்றி ... லு மதுத்துனிகியூரல்
காய்ந்தநீர் கொள்ளிற் றீரும் கனலெரிவாதந்தானே (44)

(இ-ள்) பூதாகாதிக்கிருதம், கும்பசாகம், தசமூலம், மதுஸ்நுஹி ஊரல் கஷாயம் முதலானவைகளினுல் தீரும்.

துடிவாதத்திற்கு

அனலெரி வாதந்தன் னில் அமைத்திடு மருந்தினுலும்
கனவிட முட்டியாதிக் கஷாய மருந்தலாலும்

தனவயிர் வாசஞ்சிந்தா மணி தன்னினுலும்
புன கம்ப வாதமற்றத் துடிவாதம் போமென்ருேதே (45)

(இ-ள்) அனலெரி வாதத்திற்குச் சொல்லிய மருந்துகளே இந்த வியாதிக்கும் அமையும். விஷமுஷ்டியாதி (எட்டிக்கொட்டை) கஷாயத்தை உட்கொள்ளுவதனுலும், வயிரவ சிந்தாமணியைச் சாப்பிடுவதனுலும், கம்பவாதம், துடிவாதம் முதலான நோய்கள் நீங்கும்.

விரணவாதத்திற்கு

சீரகங் கரிய சீரந் திரிகடு கருடமூலம்
பேர்பெறு மிச்க்கு சூரை பேணிய கஷாயந் தன்னி
லேர்பெறு மிரதபற்பந் தேனுட னிசைத்துண் பீரால்
வீரமாம் விரணவாதந் தீர்ந்திடும் விளம்பினேமே. (46)

(இ-ள்)	சீரகம்	கருஞ்சீரகம்
	சுக்கு	திப்பிலி
	மிளகு	கருடங்கிழங்கு
	இசங்கு	சூரை வேர்

இவைகளைச் சரியெடையெடுத்து இடித்து 8 மடங்கு சுத்த ஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி $\frac{1}{8}$ ஆக வற்றவைத்துக்கொள்ளவும். ரஸபற்பத்தைத் தேன் விட்டுக் குழைத்துச் சாப்பிட்டுப் பின்னர் கஷாயத்தைப் பருகவும். விரண வாதங்கள் தீரும்.

கடி வாதத்திற்கு

தீராதெனினுங் கடிவாதம் செப்புஞ் சிகித்ஸை யனல்வாதம்
சார்வாமருந்தே யிதுதனக்குஞ் சாற்றுகின்ருே மிவையன்றி
வார்சேர் முலையாய்! பாதத்தில் வதியும் நரம்பொன்றதுகண்டு
நீர்வாரிரத்தம் போக்கிடுகில் நீங்குஞ்சுடக்கு வாதமதே. (47)

(இ-ள்) பொதுவாக இந்நோய் (இடுப்புப் பிடிப்பு) தீராது. அனல் வாதத்திற்கேற்பட்ட சிகித்ஸையைச் செய்யவும். பாதத்தில் இருக்கும் நரம்பைக் கீறி இரத்தத்தை வெளியாக்கவும். சுடக்கு வாதமும் தீரும்.

அண்டவாதம், குடல் வாதம், கழல் வாதத்திற்கு மருந்து.

கழல்மேனி வெள்ளையுள்ளி கடு திரி முருங்கைக்காயு
மழலினி லெட்டொன்ருக்கி யாமணக் கெண்ணெயோடும்
குழல் மொழி மானே! மாந்தர் கொண்டிடிலண்டவாத
மெழுகுடல் வாதமற்றக் கழல்வாத மேகுங்காணே (48)

(இ-ள்)	கழற்சிக்காய் வித்து	குப்பைமேனி
	பூண்டு	சுக்கு
	திப்பிலி	மிளகு
	முருங்கைக்காய் வித்து	

இவைகளைச் சரியெடையெடுத்து நசுக்கி, ஒரு பாத்திரத்திலிட்டு 8 மடங்கு சுத்த ஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்றாகும் வரை யெரித்து வடிக்கட்டி ஆமணக்கெண்ணெய் விட்டு உட்கொள்ளவும்.

அண்டவாதம், குடல்வாதம், கழல்வாதம் முதலானவை தீரும்.

வாதத்திற்கான மருந்து முறைகள்

சிந்தாமணி	வாயுகுடாரம்
இரஸபற்பம்	விஷமுஷ்டித்தைலம்
காந்த பற்பம்	சிநேகப்பொட்டணம்
வாதராட்சஸன்	குககில் சூரணம்
இராமபாணத்தைலம்	இங்குளம்
பஞ்சார்க்கத்தைலம்	நிம்பத்தைலம்
சிந்தூர பூஷணம்	கும்பசாகம்
நீலகண்டரஸச் செந்தூரம்	பூதிகாதித்தைலம்
ரஸதூமம்	கெந்தகச்சூரணம்
மதுஸ்னுஹிரஸாயனம்	சருமபேனகிருதம்
லசுனகுக்கில்	ஏகாதசமூலவேது
அக்கினிகுமாரம்	வனகெந்தாதிச் சூரணம்
சொர்ணபற்பம்	பூதிகாதிகிருதம்
இரஸச்செந்தூரம்	சொர்ணவைரவரஸம்

(இ-ள்) இந்தப் பிரயோகமெல்லாம் இனி சாஸ்திரத்துடர்ச்சியிற் கண்டு அந்தந்த வாதகுண விபரீதங்களை யறிந்து இந்தப்படி வாதசிகித்ஸை செய்யக்கடவன.

பித்த சிகித்ஸை

பிரதான பித்தத்திற்கு மருந்து

சீர்பெருமிஞ்சித் தோல்போக்கிச் சிறுகவே நறுக்கி நாழி
நீர்தனி லெட்டொன்றாக்கி நிட்க மொன்றிட்டுச் சீனி
யார்வமாய்க் கொள்ள வில்வ மூலலேகிய மருந்தச்
சார்பிரதான பித்தந் தணிந்திடுஞ் சுகமுண்டாமே (1)

(இ-ள்) இஞ்சியின் தோலைச் சுரண்டிவிட்டுச் சிறு சிறு துண்டுகளாக நறுக்கி 1 படி சுத்த ஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்ருக வற்ற வைக்கவும். இதனுடன் 1¼ வராகனெடை சர்க்கரை சேர்த்துப் பருகவும். வில்வாதி லேகியமும் சாப்பிடவும். பிரதான பித்தங்கள் தணியும்.

பக்குவாசய பித்தத்திற்கு

இஞ்சியின் சாறு தன்னில் திரிகடு கிசைக்கத் தீரும்
இஞ்சியின் சாறுமிந்து மியல்புடன் கொள்ளத் தீரும்
இஞ்சிலேகியத்தைத் தானே யிதம் பெறக்கொள்ளத் தீரும்
இஞ்சியின் கஷாயத்தாலும் பக்குவாசயம்போ மென்னே (2)

(இ-ள்) இஞ்சிச் சாற்றுடன் சுக்கு, திப்பிலி, மிளகு இவற்றின் சூரணத்தை யிட்டு உட்கொள்ளவும். அல்லது ஷை சாற்றுடன் இந்துப்பு சேர்த்துப்பருகவும், மூன்ருவதாக இஞ்சி லேகியத்தையுட்கொண்டாலும் குணமுண்டாகும். இஞ்சிக் கஷாயத்தை உட்கொண்டாலும் பக்குவாசய பித்தங்கள் தீரும்.

ஆமாசய பித்தத்திற்கு

சேர் திராட்சாதியான சூரணந் தேனிலுண்ணப்
பார்புகழ் கூவிளாதிக் கஷாயத்தைப் பருகமேலுஞ்
சார்பெரும் அச்வகந்த பலாலாட்சந் தைலந்தேய்க்க
வார்முலைமானே! ஆமா சயபித்தமாறுங்காணே. (3)

(இ-ள்) திராட்சாதி சூரணத்தைத்தேனில் குழைத்து உட்கொண்டாலும் வில்வாதி கஷாயத்தைப் பருகினுலும், அச்வகந்தி பலாலாக்ஷா தைலத்தை உடலில் தேய்த்து முழுகினுலும் ஆமாசய பித்தங்கள் மாறும்.

மலாசய பித்தத்திற்கு

கூறிய பாணபுங்க வில்வலே கியத்தைக் கொள்ள
மீறிய காளசாகவில் வாதிக் கஷாயங்கொள்ள
மாறிடுஞ் சொன்னேஞ் சொன்னே மலாசயப் பித்தந்தேகம்
தேறிடும் பலமுண்டாகும் தேன் மொழித்திருவே நல்லாய். (4)

(இ-ள்) சரபுங்க வில்வாதி லேகியத்தை உட்கொண்டு இதனுடன் கருவேப்பிலை வில்வவேர் இவ்விரண்டையும் சேர்த்து இடித்துக்கஷாயமிட்டுப் பருகவும். மலாசய பித்தங்கள் தீரும்.

சலாசயப் பித்தத்திற்கு மருந்து

மேவிய வில்வப்பிஞ்சு விளாம்பிஞ்சு கிளுவைப்பிஞ்சு
ஆவரைப் பிஞ்சுப் பூவே ரதின்கொழுந் திலாமிச்சம் வேர்

தாவிய மதுரஞ் சீரஞ் சண்கப் பூவோ டேலம்
பூவையே குடிநீர் கொள்ளச் சலாசயப் பித்தம் போமே. (5)

(இ-ள்)	வில்வப்பிஞ்சு	விளாம் பிஞ்சு
	கிளுவைப்பிஞ்சு	ஆவரைப்பிஞ்சு
	ஆவரங்கொழுந்து	இலாமிச்சம் வேர்
	அதிமதுரம்	சீரகம்
	சண்பகப்பூ	ஏலக்காய்

இவைகளை யிடித்து ஒரு பாத்திரத்திலிட்டு, 8 மடங்கு சுத்த ஜலம்விட்டு அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்றாக வற்றவைத்து வடிக்கட்டி உட்கொள்ளவும். சலாசயப் பித்த நோய்கள் தீரும்.

இரத்தபித்தத்திற்கு

கேடல தவிரும் கூஷ்பாண்ட கிருதத்தைக் கொள்ளத்தீருந்
தோடுறு மரசாலித்தி யத்தியின் றெக்கிச் சீந்தில்
கூடிய கஷாயந் தன்னி லேலாதிக் கொள்ளத் தீரும்
ஈடுறு மிரத்தபித்த மென்னவே யியம்பினேமே. (6)

(இ-ள்)	1.	கூஷ்மாண்டகிருதத்தை உட்கொள்ளவும்	
	2.	அரசம் பட்டை	ஆலம்பட்டை
		அத்திப்பட்டை	இத்திப்பட்டை

இவைகளை வகைக்கு 1 பலம் வீதமெடுத்து இடித்து 8 மடங்கு சுத்த ஜலம்விட்டு அடுப்பின் மேலேற்றி எரித்து எட்டிலொன்றாகக்காய்ச்சி வடிகட்டி உட்கொள்ளவும். ஏலாதிச் சூரணத்துடனும் குடிக்கலாம். இரத்தபித்தங்கள் தீரும்.

மாங்கிஷ பித்தத்திற்கு

கூஷ்பாண்ட கிருதந்தன்னை மண்டலங்கொள்ளத்தீரும்
வாட்பூண்ட கண்ணின் மாதே! வாழையின் கிழங்கதாக்கு
நாட்பூண்ட கஷாயந்தன்னில் நல்லசர்க்கரையிட் டுண்ணச்
சேட்பூண்ட மாங்கிஷத்திற் சேர்ப்பித்தந் தீரு மென்னே (7)

(இ-ள்) 1. கூஷ்மாண்டகிருதத்தை 45 நாட்களுக்கு உட்கொள்ளவும். 2. வாழைக்கிழங்கை நசுக்கிக்கஷாயம் செய்து நல்ல சர்க்கரை கூட்டி உட்கொள்ளவும். மாங்கிஷ பித்தங்கள் நீங்கும்.

மேதோ பித்தம், அத்தி பித்தம் இரண்டிற்கும் மருந்து

பாங்குடன் சேர் தாளீசப் பத்திரி வடகமுண்ணத்
தீங்கறும் அசுவகந்தி பலாஸ்ராட்சாத்தைலந் தேய்க்க

வோங்கிய மேதோபித்த முறுதிசே ரத்திப்பித்தம்
வாங்கிடுஞ் சுகமுண்டாகும் யென முனி வகுத்தவாறே (8)

(இ-ள்) 1. தாளீச பத்திரி வடகத்தை உட்கொள்ளவும். 2. உடலிற்கு அச்வகந்தி பலாலாக்ஷாதைலம் தேய்த்துக்குளிக்கவும். மேதோ பித்தம், அத்தி பித்தம் இவ்விரண்டும் தீரும்.

மஜ்ஜை பித்தத்திற்கும், சுக்கில பித்தத்திற்கும் மருந்து

சொல்லுவோம் மஞ்சிட்டாதிக் கிருதத்திற் சொர்ணபற்பம்
புல்லவே சேர்த்தருந்த போய்விடும் மஜ்ஜைப்பித்த
மொல்லையில் வங்கஞ்சேர்த்து மஞ்சிட்டிக் கிருதமுண்ண
அல்லல் செய் சுக்கிலத்திற் பித்தம தகன்று போமே (9)

(இ-ள்) மஜ்ஜை பித்தந்தீர மஞ்சிஷ்டாதிக் கிருதத்துடன் சொர்ண பற்பத்தைக் குழைத்துச்சாப்பிடவும். சுக்கில பித்தம் தீருவதற்கு மஞ்சிஷ்டாதி கிருதத்துடன் வங்கபற்பம் உட்கொள்ளவும்.

சுரோணித பித்தத்திற்கு

புத்திர மஞ்சிட்டாதி கிருதத்தைப் பூவின் மானே !
பத்திருபது நாட்கொள்ளத் தீர்ந்திடும் வடத்தின் பாலுஞ்
சித்தமாங் கதலி வாழை பழமுஞ் சேர்த்துண்ணத் தீருஞ்
சுத்தமாங் சரீரந் தன்னிற் சுரோணிதப் பித்தம் போமே (10)

(இ-ள்) 1. மஞ்சிஷ்டாதிக் கிருதத்தை 30 நாட்களுக்கு உட்கொள்ளவும். 2. ஆலம்பாலை வாழைப்பழத்தில் சேர்த்து உட்கொண்டாலும் சுரோணித பித்தங்கள் நீங்கும்.

குறிப்பு :—இது பெரும்பாலும் ஸ்திரீகளுக்கு ஏற்படும் நோயாகும்.

சந்திகத பித்தத்திற்கு மருந்து

செப்பிள முலையாய்க் கேளாய் ! திருந்து மார்த்திரகம் வில்வம்
கப்புறு சிறுகாஞ்சோறி கடுநெல்லி தான்றி கூட்டி
வெப்புறக் காய்ந்த நீரில் மிக்கசந் திரோதயத்தே
ஞெப்புறக் கொள்ளச்சந்தி கதபித்த மோடுமென்னே (11)

(இ-ள்)	இஞ்சி	வில்வவேர்
	சிறுகாஞ்சோறி வேர்	கடுக்காய்த்தோல்
	நெல்லிவற்றல்	தான்றித்தோல்

இவைகளை வகைக்கு 1 பலம் வீதமெடுத்து இடித்து ஒரு பாத்திரத்திலிட்டு, 8 மடங்கு சுத்தஜலம்விட்டு அடுப்பின்மேலேற்றி, எட்டிலொன்ருக வற்றவைத்துச் சந்திரோதயச் செந்தூரத்துடன் உட்கொள்ளவும். சந்திகத பித்த நோய்கள் தீரும்.

உதர பித்தத்திற்கு மருந்து

நெல்லியி னிலை கற்ருழை நிறைதிரி பலையே சுக்கும்
சொல்லிய நன்மருந்தே காய்ந்த நீர்கொள்ளத் தீரும்
புல்லிய புடோலேகாய்ந்து பொருந்தும்நீ ரருந்தத்தீரும்
நல்லிய லுதரபித்த மெனமுனி நவின்றவாறே (12)

(இ-ள்)	நெல்லியிலை	கற்ருழை மடல்
	கடுக்காய்த்தோல்	நெல்லிவற்றல்
	தான்றித்தோல்	சுக்கு

இவைகளை இடித்து ஒரு பானையிலிட்டு 8 மடங்கு சுத்த ஜலம் விட்டு எட்டிலொன்ருகும் வரை யெரித்துப் பருகவும். அல்லது பேய்புடல் கஷாயத்தையும் முன் கூறியபடி உட்கொள்ளவும்.

வில்வாதி லேகியகுணம்

காதிய வாதபித்தங் கபசி லேத் பனத்திற் பித்தம்
வாதசிலேத் பனத்திற் பித்தம் வகுத்திடும் பிராணபித்தம்
தாது சேருதானன் மற்ற வியானனற் சமானபான
ஞேதிய யெட்டும் வில்வ லேகியத் தொழியுமென்றே. (13)

(இ-ள்) வில்வாதி லேகியத்தை உட்கொள்வதனுல் வாதபித்தம், கப சிலேத்மபித்தம், வாதச்லேத்மனம், பிராணபித்தம், உதான, வ்யான, ஸமான இவைகளின் ஆவரண பித்தம் முதலான ரோகங்கள் தீரும்.

அன்னபித்தம், ஆமபித்தம், குண்டலீ பித்தம் மூன்றுக்கும் மருந்து

ஆமலகாதி யென்னும் லேகியமருந்தத்தீரும்
தாமலை வான வன்ன பித்தஞ் சாராம பித்தம்
பூமயிலனையாய்! குண்டலாதி லேகியம் புசிக்கச்
சேரு குண்டலியிற் பித்தங் தீர்ந்திடுந் தெரிந்து செய்யே. (14)

(இ-ள்) ஆமபித்தம், அன்னபித்தம் இவைகள் தீர "ஆமலகாதி லேகியத்தை" உட்கொள்ளவும். குண்டலி பித்தத்திற்குக் குண்டலாதி லேகியத்தைச் சாப்பிடவும்.

கபால பித்தம் அமிர்தபித்தம் நேத்திரபித்தம் இம் மூன்றுக்கும் மருந்து

தேசியின் பழங்குடைந்து சிறுகவே துரிசைவிட்டுக்
கூசிடா துண்டு பித்தங் கொட்டில் மேற்குடிநீரிஞ்சி
மாசிலா முசுமுசுக்கை வளர் பொன்னுங்காணி சீரங்
காசணி முலையாய்! சீனி கலந்தது கொள்ள வேண்டும். (15)

(இ-ள்) ஒரு சுத்தமான பெரும் எலிமிச்சம் பழத்தை யெடுத்துக் குடைந்து அதனுள் துரிசையிட்டுச் சிறிது நேரஞ்சென்று பழத்தைப்பிழிந்து உட்கொள்ளவும். பித்தத்தை வெளியாக்கும்.

2. இஞ்சி — முசுமுசுக்கை
பொன்னுங்காணி — சீரகம்.

இவைகளை இடித்து ஒரு பாத்திரத்திலிட்டு 8 மடங்கு சுத்த ஜலம் விட்டு எட்டிலொன்ருக வற்றவைத்துச் சீனி சேர்த்துப் பருகவும்.

நேத்திர பித்தத்திற்கு மருந்து

சம்பீரத் தைலந்தன்னைத் தரித்தது முழுகவேண்டுங்
கொம்பாழும் நாழி கேரக் குழம்புகண் ணெழுதவேண்டும்.
வம்பாருங் கபாலபித்தம் வளர்ந்திடு மமிரதபித்தஞ்
சொம்பார் நேத்திரத்திற் பித்தந் துலைந்திடு மறிகுவீரே (16)

(இ-ள்) சம்பீரத்தைலத்தைத் தலையில் தேய்த்துக் கொண்டு முழுகவும். நாரிகேளாஞ்சனத்தை (அதாவது நாழிகேரக்குழம்பை) $\frac{1}{2}$ பயறளவு கண்களிலிடவும். கபாலபித்தம், அம்ருத பித்தம், நேத்திர பித்தம் இவை நீங்கும்.

அரித்திரா பித்தத்திற்கு

ஆவினெய் படியரை யதிலறல்நீர் வாழிச் சாறுமுரி
கோவைத்தண்டு கொடுப்பையுடன் கூறுந்தாழை தென்னம்
பூவிற்சாறு வகைக்குழக்குப் புகட்டிச் சீரம் பொரிக்காரம்
தாவுசுக்கோ டிலவங்கஞ் சருமஞ் சண்பகம் லாமிச்சம் (17)

முத்தங் கொத்த மதிமதுரமுதிய கோட்டம் வகைக் கழஞ்சா
இத்திற்கார ந்தனை நீக்கி யிசைய வரைத்துக் கொதித்திறக்கி
சுத்தக்காரம் பொடித்திட்டாற் சொல்வேர் சர்க்கரை முக்கழஞ்சாய்
மத்திலிட்டுக் குடித்திட்டா லரித்திர பித்தமகன்றிடுமே. (18)

(இ-ள்) பசுவின் நெய் $\frac{1}{2}$ படி ($2\frac{1}{2}$ சேர்)
தண்ணீர்விட்டான் கிழங்குச்சாறு $\frac{1}{2}$ படி (1 சின்னப்படி)
கோவைத்தண்டுச்சாறு 1 உழக்கு

கையாந்தகரைச்சாறு	1	உழக்கு
தாழைமட்டைச்சாறு	1	,,
தென்னம்பூச்சாறு	1	,,

இவைகளையொன்று கலந்து வைத்துக்கொள்ளவும். இதனுடன்,

சீரகம்	கிராம்பு
சுக்கு	இலாமிச்சம் வேர்
சண்பகப்பூ	கொத்தமல்லி விதை
கோரைக்கிழங்கு	கோஷ்டம்
அதிமதுரம்	

இவைகளை $1\frac{1}{4}$ வராகனெடை வீதமெடுத்து, ஏதேனும் ஒரு சாறுவிட்டு நன்ருக அரைத்துச் சாறு கூட்டிய நெய்யுடனே குழப்பி அடுப்பின் மேலேற்றி எரித்துப் பதத்தில் இறக்கி வடிகட்டிக்கொள்ளவும். இதனுடன் பொரிக்காரம் $1\frac{1}{4}$ வராகனெடை சேர்த்துச் சீனி $3\frac{3}{4}$ வராகனெடையும் சேர்த்துக்கலக்கி உட்கொண்டால் அரித்திரா பித்தம் (காமாலை) தீரும்.

திக்த பித்தத்திற்கு

திருந்திய முசுமுசுக்கை சிறுபயறுடனே சீரம்
பொருந்திய வில்வமூலம் பேய்ப்புடல் பொரிமா நெல்லி
கருந்தோலி போக்குஞ் சுக்குங் காய்ந்திடுங் குடிநீர் தன்னை
அருந்திடில் திக்தபித்தம் அகன்றிடு மறிகுவீரே (19)

(இ-ள்)	முசுமுசுக்கை	சிறுபயறு
	சீரகம்	வில்வமூலம்
	பேய்ப்புடல்	மாம்பருப்பு
	நெல்லிவற்றல்	தோல் போக்கிய சுக்கு

இவைகளை வகைக்கு 1 பலம் வீதம் எடுத்துக்காயவைத்துக் கல்லுரலிலிட்டு ஒன்றிரண்டாக இடித்து வைத்துக்கொள்ளவும். இதில் 1 பலம் தூள் எடுத்து 1 சேர் சுத்த ஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்ருக வற்றவைத்து வடிகட்டி உட்கொள்ளவும். வாயில் கசப்புச்சுவையைத் தரும் பித்தங்கள் தீரும்.

இக்குரஸ, ஆமில, லவண பித்தங்களுக்கு மருந்து

காயில்லா பழுத்த தேற்றுங் கனிவெந்நீர் கரைத்தருந்தி
வாயினுற் கக்கிப் பின்னை வாய்ந்த சீரகக் கஷாயம்
நேயமாய்க் கொள்ளத்தீரும் நிரம்பிக்கு ரசபித்தத்தோ
டாய தோர் லவணபித்த மாமில பித்தந்தானே (20)

(இ-ள்) காய் முழுவதும் நன்ருகப் பழுத்த தேற்ருங் பழத்தைக்கொண்டு வந்து வெந்நீருடன் கரைத்துப் பருகவும். வாந்தியாகும். பின்னர் சீரகக்கஷாயம் உட்கொள்ளவும். கருப்பஞ்சாற்றைப்போல் தித்திப்புச் சுவையளிக்கும் பித்தம், உப்புச்சுவையைக் கொடுக்கும் பித்தம், புளிப்புச்சுவையைத் தரும் பித்தம் முதலானவை நீங்கும்.

குறிப்பு :— இக்கு = இக்ஷு = கரும்பு
ஆமில = அம்லம் = புளிப்பு

இருதய பித்தத்திற்கும், மூல பித்தத்திற்கும்

வயம் பெரு வாந்தி செய்து வளர்வில்வக் கஷாயங் கொள்ள
இயம்பிய விருதயத்தி லெழுர்பிய பித்தந்தீரும்
பயந்தனி லிந்துப்போடா மணக்கெண்ணெப் பருகத்தீரும்
வியந்திடு மூலபித்த மென முனி விளம்பினுரே (21)

(இ-ள்) முன்கூறிய முறையில் கூறப்பட்ட வாந்தியைச் செய்வித்து, வில்வக்கஷாயத்தையுட்கொள்ளவும்: இருதய பித்தங்கள் தீரும். பசுவின் பாலுடன் சிறிது இந்துப்பு கூட்டி ஆமணக்கெண்ணெ விட்டுப் பருகவும். மூல பித்தங்கள் தீரும்.

சருவாங்க பித்தம், உன்மத்த பித்தம், மோகபித்தம் இவைகளுக்கு

தேசியின் பழநீர்க்காடி செப்பிய கொற்ருன் சாறு
வீசிய துவாலை செய்து வில்வலே கியமுட் கொண்டு
மாசறு குமாரியாதி தைலத்தை மூழ்க மாறும்
பேசிய சருவாங்கத்தோ டுன்மத்த மோகம் பெண்ணே! (22)

(இ-ள்) எலிமிச்சம்பழச்சாறு காடி
கொற்ருன்சாறு

இவைகளைச் சுடவைத்து மேலே தேய்த்து முழுகவும். பின்னர் வில்வாதி லேகியம் உட்கொள்ளவும். குமார்யாதி தைலத்தைத் தலைக்குத் தேய்க்கவும். சர்வாங்க வாதம், உன்மத்த பித்தம் இவை தீரும்.

அதிசார பித்தத்திற்கு மருந்து

மாதுளங்காதி நெய்யை வழுவன்றிக் கொள்ளத்தீரும்
தாதகி மலர் கிராம்பு தாளீசஞ் சீரஞ்சுக்கு
மோத மாதளையின் பிஞ்சு முத்தமுங் கஷாயமாகி
லோததி சார பித்தம் ஒடுவதுண்மை தானே (23)

(இ-ள்) மாதுலங்காதி நெய்யை உட்கொள்ளவும்.

2. காட்டாத்திப்பூ	கிராம்பு
தாளீசபத்திரி	சீரகம்
சுக்கு	ஓமம்
மாதளைப்பிஞ்சு	கோரைக்கிழங்கு

இவைகளை இடித்து 8 மடங்கு சுத்த ஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி எட்டி லொன்றாகும் வரை வற்றவைத்துப் பருகவும். அதிசார பித்தங்கள் தீரும்.

கரபாததாக பித்தத்திற்கு

ஆவிநெய் யதனைத்தானே யங்கைகா லதனிற் தேய்த்து
பாவகமாகவே கூட் பாண்ட நெய் பருகத்தீரும்
பூவியற் சந்தனாதித் தைலம் பூசிடவுந் தீரும்
காவியங்கண்ணே ! பித்தங் கரபாத தாகம் போமே (24)

(இ-ள்) பசுவின் நெய்யைக் கை கால்களில் நன்றாய்த் தேய்க்கவும். உள்ளுக்குக் கூஷ்மாண்ட நெய்யைத் தினம் 2 வேளைகள் உட்கொள்ளவும். மேலுக்குச் சந்தனாதித் தைலத்தைத் தேய்த்துக்கொண்டு ஸ்நானம் செய்யவும். பித்த நோய்கள் தீரும்.

குண்டல பித்தத்திற்கு

ஆமணக்கெண்ணெ யிந்துப் பார்த்திரகத்தின் சாறுந்
தாமிகக் கொள்ளத்தீரும் தார்குழல் மயிலே கேளாய் !
தோமறு மவிபத்தியாதிச் சூரணம் பருகத் தீரும்
கோமளமாக நின்ற குண்டல பித்தம் போமே. (25)

(இ-ள்) ஆமணக்கெண்ணெய் இந்துப்பு
இஞ்சிச்சாறு

இம்மூன்றையும் குலுக்கி உட்கொள்ளவும். அவிபத்திச் சூரணத்தை உட்கொள்ளவும். பித்த நோய்கள் தீரும்.

பித்தரோகத்திற்கான மருந்துகள்

வில்வமூலாதி லேகியம்	ஆர்த்ரகாதி லேகியம்
ஆர்த்ரகாதிக் கஷாயம்	திராக்ஷாதிச் சூரணம்
கூவிளாதிக் கஷாயம்	அஸ்வகந்தி பலாலாக்ஷாதைலம்
பாணபுங்க வில்வாதி லேகியம்	காளசாக வில்வாதிக் கஷாயம்
கூஷ்மாண்டக்கிருதம்	ஏலாதி மாத்திரை

தாளீசபத்திரி வடகம்	மஞ்சிஷ்டாதிக்கிருதம்
சொர்ண பற்பம்	வங்க பற்பம்
சந்திரோதயம்	ஆமலகாதி லேகியம்
குண்டலாதி லேகியம்	சம்பீரத்தைலம்
நாழிகேரக் குழம்பு	குமார்யாதித் தைலம்
மாதுலுங்காதிக் கிருதம்	சந்தனாதித் தைலம்
அவிபத்தியாதிச் சூரணம்	

இவைகளை ஷ பத்தியிலே கண்டு செய்யவும்

சிலேற்பனசிகித்ஸை

திருந்திய சிலேற்ப ரோக மிருபதுந் தீரவேண்டில்
மருந்தது சதசுலோகி நிகண்டினில் வகுத்தார் முன்னே
ரிருந்திடுஞ் சிலேற்பனத்தி னினமறிந்தருந்துவீரேற்
பொருந்திய சிலேற்பரோகம் புகழறத் தீருங்காணே

(இ-ள்) சிலேற்பன ரோகமிருபதின் பேதமுமறிந்து சதச்லோகியிலே கண்ட ஒளஷதத்தை வியாதி யின மறிந்து மருந்தைத் தங்களின் பலசுருதிகண்டு சிலேற்பனத்திற்குச் சாந்தமான ஒளஷதங்கள் குணங்கண்டு கொடுக்கவும்.

சுர சிகித்ஸை

வாதத்தினுல் ஜ்வரம் இருபது, பித்தத்தினுல் ஜ்வரம் இருபத்துநான்கு, சிலேற்பனத்தினுல் ஜ்வரம் இருபது. ஆக ஜ்வரங்கள் அறுபத்துநான்கு.

இவைகளுள் அஸாத்ய வகைகள் : வாதசுரத்தில் எட்டு, பித்தத்தில் பத்து ச்லேத்மத்தில் பத்து. ஆக ஜ்வரத்தில் இருபத்தெட்டு அஸாத்யம். சாத்ய ஜ்வரம் முப்பத்தாறுந் தீரும்.

ஜ்வர நிதானமறிந்து லங்கணத்தினுலும், கற்கத்தினுலும், கஷாயத்தாலும், ஒளஷதத்தினுலும், செபத்தாலும், தவத்தினுலும், தானத்தினுலும், அர்ச்சனையினுலும் தீர்க்கக் கடவன.

இதற்குச் செய்யுள் :

சுரமதே யாதியாகிற் சுகமிலங் கனமதாகும்
சுரமதே மத்தியாகிற் சுகந்தா னியக்கஷாயம்
சுரமதே யந்தமாகிற் சுகம . . . அவுஷதமாகுஞ்
சுரமதே விடுங்காலத்திற் சுகவிரே சனமதாமே (1)

வாதஜ்வரத்திற்குக் கஷாயம்

திரிகடுக்காய் நொச்சி திகழ்கடு ரோணி தும்பை
மருவிய புனலிக்காய்வேர் வெள்ளுள்ளி வகையீதெல்லாந்
தருமிவை பலங் கால்கொண்டு தானரைத் தருந்தச் செய்யிற்
பொரு மயில் விழியாய் ! வாதச் சுரங்குளிர் போகுமென்னே (2)

(இ—ள்) கடுக்காய்த்தோல்	நெல்லிவற்றல்
தான்றித்தோல்	நொச்சியிலை
கடுகரோகிணி	தும்பைவேர்
புனலிக்காய் வேர்	பூண்டு

இவைகளை வகைக்கு $\frac{1}{4}$-பலம் வீதமெடுத்து இடித்து 8-மடங்கு சுத்த ஜலம் விட்டு அடுப்பின்மேலேற்றி எரித்து எட்டிலொன்ருக்கி இறக்கவும். இதனை யுட்கொள்ளவும். வாதஜ்வரங்கள், குளிர்ஜ்வரங்கள் முதலானவை தீரும்.

வாதஜ்வரத்திற்குத் தேவதார்வாதிக் கஷாயம்

திருந்திய தேவதாரந் திரிகடு காடாதோடை
பொருந்திய செவ்வியமூங்கி லிலைநான்குள் புகழ்மஞ்சிட்டி
தடுங்கடுரோணி வேம்புச் சார்ந்திடுங் கஷாயந் தன்னை
அருந்திடில் வாதரோகச் சுரங்குளி ரகன்றுபோலே (3)

(இ—ள்) தேவதாரம்	சுக்கு
திப்பிலி	மிளகு
ஆடாதோடை வேர்	செவ்வியம்
மூங்கில் இலை	மஞ்சிட்டி
கடுகரோகிணி	வேப்பம்பட்டை

இவைகளை வகைக்கு $\frac{1}{4}$ பலம் வீதமெடுத்து இடித்து, ஒரு பாத்திரத்தி லிட்டு 8-மடங்கு தண்ணீர் விட்டு, அடுப்பின் மேலேற்றி $\frac{1}{8}$ எரித்து வடிகட்டவும். இதனையுட்கொள்ள வாதரோகம், வாதஜ்வரம், குளிர்ஜ்வரம் முதலானவை நீங்கும்.

வாதஜ்வரத்திற்குச் சீந்தில் கஷாயம்

சீந்தில் நன்னரி முத்தஞ் செப்பிய சிறுகாஞ்சோறி
வாய்ந்திடு செவ்வியஞ் சுக்கு திப்பிலி மரிசங்கோட்டம்
மேய்ந்த திப்பிலியின்மூல மீவைசமனகைக் கொண்டு
காய்ந்திடில் வாதச்சுரங் காயாது வோடுமென்றே (4)

(இ-ள்)	சீந்தில்கொடி	நன்னாரிவேர்
	கோரைக்கிழங்கு	சிறுகாஞ்சோறிவேர்
	செவ்வியம்	சுக்கு
	திப்பிலி	மிளகு
	கோஷ்டம்	திப்பிலிமூலம்

இவைகளைச் சமனெடை எடுத்து இடித்து 8-மடங்கு சுத்த ஜலம் விட்டு அடுப்பின்மேலேற்றி எரித்து எட்டிலொன்ருக்கி இறக்கி வடிகட்டிக்கொண்டு உட்கொள்ளவும். வாதஜ்வரங்கள் தீரும்.

பித்த ஜ்வரத்திற்குக் கற்கம்

கடுவிழி மானே! கற்கங் கடு கடுரோணி சுக்கு
வடுமிள குடனே கொத்த மல்லிதிப் பிலிமுருங்கைப்
படுமலர் வகையோரேழும் பரிந்துகாற் பலமரைத்து
விடுமெனிற் பித்தரோகச் சுரமது விடுமென்ருேதே (5)

(இ-ள்)	கடுகரோகிணி	சுக்கு
	மிளகு	கொத்தமல்லி
	திப்பிலி	முருங்கைப்பூ
	கடுக்காய்த்தோல்	

இவைகளை வகைக்கு $\frac{1}{4}$ பலம் வீதமெடுத்து இடித்துத் தண்ணீர் விட்டு நன்ருக வரைத்துத் தண்ணீருடன் குழப்பி உட்கொள்ளவும். பித்தஜ்வரங்கள் அனைத்தும் தீரும்.

திராக்ஷாதிக்கஷாயம்

கொய் முந்திரிகைப் பழங்கடுக்காய் கொன்றைக்கனியே கடுரோணி
செய் சந்தனமி லாமிச்சுச் சீரகமுத்தம் பற்படக
முய்யுந் திரிகடு கிவைகாய்ந்த வுதகஞ்சினி யிட்டுண்ண
மையுண் கண்ணின் மடமானே! மாறும்பித்த சுரமென்னே. (6)

(இ-ள்)	திராக்ஷைப்பழம்	கடுக்காய்த்தோல்
	சரக்கொன்றைப்புளி	கடுகுரோகிணி
	சந்தனத்தூள்	இலாமிச்சைவேர்
	சீரகம்	கோரைக்கிழங்கு
	பற்பாடகம்	சுக்கு
	திப்பிலி	மிளகு

இவைகளை வகைக்கு 1 பலம் வீதமெடுத்து இடித்து பத்திரப்படுத்தவும் வேண்டும்போது இதில் 1 பலம் அளவு தூளெடுத்து 1 சேர் தண்ணீர் விட்டு

அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்ருக வற்றவைக்கவும். இக் கஷாயத்தைச் சீனி சேர்த்துப் பருகிவரப் பித்த ஜ்வரங்கள் அனைத்துந்தீரும்.

பித்த ஜ்வரசிகித்ஸை மதுகாதிகஷாயம்

இனியமதுரஞ் சீந்திற்றண் டிருவேலியின் வேரிலாமிச்சுக்
கனிமுந்திரிகைச்சித்த முட்டிக் கல்லும் வில்வவேர் சுக்கு
வனையுஞ் சந்தம் நன்ஞரி வாய்ந்தகஷாயங் காய்ந்துண்ணிற்
புனித மதிய நுதல் மானே ! பித்த சுரத்தைப் போக்கிடுமே. (7)

(இ-ள்)		
	அதிமதுரம்	சீந்தில்தண்டு
	வெட்டிவேர்	இலாமிச்சைவேர்
	திராக்ஷைப்பழம்	சித்தாமுட்டிவேர்
	வில்வவேர்	சுக்கு
	சந்தனத்தூள்	நன்ஞரிவேர்.

இவை வகைக்கு 1 பலம் வீதமெடுத்து இடித்து வைத்துக்கொண்டு, வேளைக்கு 1 பலம் தூளையெடுத்து 1 சேர் சுத்த ஜலம் விட்டு அடுப்பின் மேலேற்றி எட்டிலொன்ருக வற்றவைத்து வடிகட்டிப் பருகவும். பித்த ஜ்வரங்கள் தீரும்.

சிலேஷ்ம ஜ்வர சிகித்ஸை கபஜ்வரத்திற்கு த்ரிகடுக்கற்கம்

உரைதிரிகடுகு வெள்ளை யுள்ளிநிற்குன்றி கையான்
புரையறு கடுக்காய் தான்றி புனலிவேர்க் கடுகுரோணி
சரி யிவை யரைத்துக் கற்கம் தானது நுகருவீரேல்
விரைதரு சிலேற்ப ரோகச் சுரமது தவிருமென்றே. (8)

(இ-ள்)		
	சுக்கு	திப்பிலி
	மிளகு	வெள்ளைப்பூண்டு
	கருநொச்சி	கையாந்தகரை
	கடுக்காய்த்தோல்	தான்றிக்காய்த்தோல்
	புனலிவேர்	கடுகரோகிணி.

இவைகளை வகைக்கு அரை வராகனெடை வீதமெடுத்துத் தண்ணீர் விட்டு நன்ருக வரைத்துத் தண்ணீரில் கலந்து அருந்தவும். கபச்சுரங்கள் தீரும்.

ஜ்வரத்திற்கு "முத்தாதிக்கற்கம்"

முத்தங் கடுக்காய்த் திப்பிலியின் மூலங்கடுகு ரோணிசுக்குத்
தெத்தும் படோலம் பற்படகஞ் சீந்தியாடா தோடையிலை
யொத்தகஷாய மெட்டொன்ரு யூறிக்காய்ந்து கொள்வீரேற்
கத்துச் லேத்ம சுரந் தீருங் காசச் சுவாச மகன்றிடுமே. (9)

॥ श्रीशाहमहाराजकृतसंस्कृतकीर्तनानि ॥

ஸ்ரீ சாஹ மஹாராஜாவின் ஸம்ஸ்க்ருத கீர்த்தனைகள்

by

Siromani, Vidvan & Sangeetam

T. G. ANANTHASUBRAMANIAN,

Research in Music, T. M. S. S. M. Library, Tanjavur.

கி. பி. 17-ம் நூற்றுண்டில் தஞ்சையை ஆண்ட முதல் மராத்திய அரசர் 'ஏகோஜி' என்பவர். இவருக்கு மூன்று குமாரர்கள். 1. சாஹஜி 2. ஸர்போஜி 3. துளஜா. இவரையே "துக்கோஜி" என்றும் கூறுவர். கி. பி. 1684 to 1710 வரை சாஹஜியும், கி. பி. 1711 to 1728 வரை ஸர்போஜியும், கி. பி. 1729 to 1735 வரை துளஜாவும் அரச பதவி ஏற்று நடத்தினுர்களெனத் தெரிகிறது. இவ் விபரத்தை "ஸங்கீத மகரந்தம்" எழுதிய "வேதா" என்பவர் கூறுகிறுர். மூத்தவரான சாஹஜி என்பவர் ஸகல கலை, கல்வி முதலியவைகளில் தேர்ச்சி பெற்று மஹாவித்வாளுக விளங்கினுர். அத்தோடு பல மொழிகளையும் கற்றிருந்தார். மஹாவித்வாளுன ஸ்ரீ சாஹஜி பல ஸங்கீத கீர்த்தனைகளையும், பதங்களையும் செய்துள்ளார். அவைகளில் பெரும்பாலும் தன் தாய் மொழியான மராத்தி மொழியிலேயே பாடியுள்ளார். அப்படியிருந்தும் ஸம்ஸ்க்ருதம், தெலுங்கு முதலிய மொழிகளிலும் சில க்ருதிகள் செய்துள்ளார்.

அவர் செய்துள்ள க்ருதிகள் அநேகமாக பதங்களாகவே இருக்கின்றன. அப்பதங்கள் பக்திச்சுவையாகவும், பொருட்சுவை, சொற்சுவை நிரம்பியது மாகவும் காணப்படுகின்றன. இவர் தஞ்சையில் எழுந்தருளியிருக்கும் [बृहदीश्वर] "பெருவுடையான்" பேரிலும் [बृहन्नायिका] "பெருவுடை நாயகி" பற்றியும், உத்ஸவ மூர்த்தியான [त्यागेश] "த்யாகேசர்" பற்றியும், [இவரை விடங்கர் என்றும் கூறுவதுண்டு. தஞ்சை மாவட்டத்தில் அநேகமாக கோயில்களில் உத்ஸவ மூர்த்தியாக விடங்கரைத்தான் வழிபடுகிறுர்கள் என்பது குறிப்பிடத்தகுந்தது.] பாடியுள்ளார். மேலும் உத்ஸவமூர்த்தியாகிய அம்பாள் "ஆனந்தவல்லி" யின் பேரிலும், பஞ்சநத க்ஷேத்ரம் என்று ப்ரஸித்தி பெற்ற திருவையாற்றில் கோயில் கொண்டிருக்கும் "பஞ்சநதீச"ரையும், அம்பாள் "தர்மஸம் வர்த்தனி" யையும் சுப்ரமண்யரையும் பாடியுள்ளார். இவர் பாடிய ஸம்ஸ்க்ருத கீர்த்தனைகள் சிலவேயாகும்.

முத்ரை

இவர் பாடிய பதங்களிலும், கீர்த்தனங்களிலும் "த்யாகேச" என்று காணப்படுகிறது. ஆனுல் இது முத்ரையாகாது என்பது இவர் இயற்றிய ஸம்ஸ்க்ருத கீர்த்தனைகளிலிருந்து தெரியவருகிறது. ஸம்ஸ்க்ருத கீர்த்தனைகள்

பல இவர் காலத்தில் இருந்தபடியால் தன் சொந்த முத்ரையைப் போட்டுள்ளா ரெனத் தெரிகிறது. இவர் இயற்றிய மராத்திய பதங்களில் பெரும்பாலும் "த்யாகேச" [त्यागेश] என்று இருக்கின்றது. தன் சொந்த தாய்மொழியில் இயற்றிய பதங்களுக்கு முத்திரை தேவையில்லை எனவும் நினைத்திருக்கலாம் எனத் தெரிகிறது. மேலும் முத்ரை "த்யாகேச" [त्यागेश] என்பது இல்லை என்பதற்குப் பல காரணங்கள் உள. இவருக்கு உபாஸனமூர்த்தி த்யாகேசராகும். த்யாகேசர் மேல் பல க்ருதிகள் செய்துள்ளார். இவர் முத்ரை "शाहनुत" (சாஹநுத) என்பதாகும். காரணங்கள் :—

1. ஆஹிரி ராக கீர்த்தனையில் "अब्जहरत्यागेशदयिते" [அப்ஜஹர த்யாகேச தயிதே] என்றும் "अब्जमित्रान्वयशाहनुते" [அப்ஜ மித்ரான்வய சாஹநுதே] என்றும் கூறியுள்ளார். மேற்கண்ட வாக்யத்தால் இவர் ஸூர்ய வம்சத்தைச் சேர்ந்தவரெனத் தெரிகிறது.

2. தன்யாஸி ராகத்தில் பாடிய 'भावये पञ्चनदीशं' [பாவயே பஞ்சநதீசம்] என்ற கீர்த்தனையில் மூன்ருவது சரணத்தில் 'चण्डविक्रमशाहेन्द्रस्वान्तसिताब्जभृङ्गम्' [சண்டவிக்ரம சாஹேந்த்ர ஸ்வாந்த ஸிதாப்ஜ ப்ருங்கம்] என்றும்

3. பந்துவராளி ராகத்தில் பாடப்பெற்ற 'த்ரிபுரஸுந்தரி' [त्रिपुरसुन्दरि] என்ற பதத்தில் மூன்ருவது சரணத்தில் 'शाहमहाराजविनुते' [சாஹமஹாராஜ விநுதே] என்றும் காணப்படுகிறது. மேலும் 'த்யாக' என்பது முத்ரையில்லை யென்பதற்கு மற்ருெரு காரணம் 'हरहर वृषतुङ्ग' [ஹர ஹர வ்ருஷ துங்க] என்ற கீர்த்தனையில் 'त्यागबृहन्नायिकासहित' [த்யாக ப்ருஹந்நாயிகா ஸஹித] என்று கூறியுள்ளார். ஆகையால் ப்ருஹதீச்வரர் என்பவர் மூலஸ்தானமாகவும், த்யாகேச என்பது உத்ஸவமூர்த்தி என்பதற்கும் சான்ருகும். 'ஹர ஹர வ்ருஷதுங்க' என்ற கீர்த்தனையில் 'बृहदीशलिङ्गम्' [ப்ருஹதீச லிங்கம்] என்று இருக்கிறது இவைகளால் இவர் முத்ரை 'த்யாகேச' [त्यागेश] என்பது இருக்க முடியாது. त्यागेश என்று ஒரு வாகேயக்காரர் இருந்ததாகவும் தெரியவில்லை. இவர் இயற்றிய ஸம்ஸ்க்ருத க்ருதிகள் மிக லலிதமாகவும், பொருட்சுவை, சொற்சுவை முதலியவைகள் நிரம்பியும், ப்ராஸம், அனுப்ராஸம், யமகம் முதலான அலங்காரங்கள் அமைந்தும் காணப்படுகின்றன. அநேகமாக ப்ரஸித்த ராகத்தில்தான் பாடியுள்ளார். பதங்களாகவே காணப்படுகிறபடியால் பல்லவிக்கு அடுத்து சரணங்களே அமைந்துள்ளன. மூன்று சரணங்களுக்குக் குறையாமல் பதங்கள் அமைந்துள்ளன. இவர் ஸபையில்தான் 'ஸங்கீத மகரந்தம்' எழுதிய 'வேதா' என்ற மகா பண்டிதர் இருந்தாரெனத் தெரிகிறது. ஸ்ரீ சாஹ மஹாராஜா ஸங்கீதத்தில் மிகுந்த புலமை பெற்றவரெனத் தெரிகிறது. இவர் இயற்றிய ஸம்ஸ்க்ருத க்ருதிகளை இங்கே தருகிறேம். இக்க்ருதிகள் கச்சேரிகளில் பாடத்தகுந்தவை.

N. B.—தஞ்சை மஹாராஜா ஸர்போஜி ஸரஸ்வதி மஹால் லைப்ரரியிலுள்ள மராத்தி கேடலாக் [Marathi Manuscripts Catalogue] Vol. III 18 th-Vahyas (वह्या) இலிருந்து எடுக்கப்பட்டது. अरा - 259 वहि - 2053

रागम् – पन्तुवरालि] [तालम् – आदि

(पल्लवि)

शंकरतनय मां पाहि षण्मुखदेव ।
किंकरदीन मां त्राहि केकिवरवाहन ॥ (शंकरतनय)

चरणम् (१)

तारकासुरदारण ताराधिपधरयुत ।
तारासोदरिसुत तारकब्रह्मन् ।
ताराहारधर तारितकिंकर ।
ताराधिपकलाधर ताराप्रियसन्नुत ॥ (शंकरतनय)

(२)

देवसेनानायक देवादिमुनिस्तुत ।
देवादिदेवसुत देव मां पाहि ।
देवेशहितपूर्व देववृन्दहरण ।
देवकीसुतप्रिय देवतासार्वभौम ॥ (शंकरतनय)

(३)

करशक्तिधर चारुकराम्बुजशोभित ।
करिमुखसोदर करुणाकर ।
करदारितक्रौञ्च रत्नाकरगम्भीर रणभी-
कर त्यागेशसुत संतोषकर पाहि सदा ॥ (शंकरतनय)

51-வது மேளம்

ராகம் — பந்துவராளி
தாளம் — ஆதி

ஆ — ஸ . ரி . க . ம . ப . த . நி . ஸ் .
அ — ஸ் . நி . த . ப . ம . க . ரி . ஸ .

பல்லவி

சங்கரதநய மாம் பாஹி ஷண்முகதேவ,
கிங்கரதீன மாம் த்ராஹி கேகிவரவாஹன-சங்கரதநய

சரணம் 1.

தாரகாஸுரதாரண தாராதிபதரயுத
தாராஸோதரிஸுத தாரகப்ரஹ்மந்
தாராஹாரதர தாரித கிங்கர
தாராதிபகலாதர தாராப்ரியஸந்நுத-சங்கரதநய

2

தேவஸேனநாயக தேவாதிமுனிஸ்துத
தேவாதிதேவஸுத தேவ மாம் பாஹி
தேவேசஹிதபூர்வ தேவப்ருந்தஹரண
தேவகீஸுதப்ரிய தேவதாஸார்வபௌம-சங்கரதநய.

3

கரசக்திதர சாருகராம்புஜசோபித
கரிமுகஸோதர கருணகர
கரதாரிதக்ரௌஞ்ச ரத்நகரகம்பீர ரணபீ
கர த்யாகேசஸுத ஸந்தோஷகர பாஹிஸதா சங்கரதநய.

रागम् – ....] [तालम् –शापु (अट)

(पल्लवि)

हर हर वृषतुरङ्ग(तुङ्ग) हर मे दुरितं दयापाङ्ग ।
परमेश्वर सदय भयभङ्ग पाहि मां बृहदीशलिङ्ग ॥ (हर हर)

(अनुपल्लवि)

कनकाचलचापधर अनलानीलहरिशर-
घनपुरत्रयमदहर कालितजयाय शक्तिकीर्तिभर ॥ (हर हर)

(चरणम्)

पतितयममदशोषण रतिपतिगर्वभञ्जन ।
अतिचलितरंगतरलमन अन्धकगजसुदमन ।
नाग भूषाभूषित योगिध्येयशाहनुत ।
त्यागबृहन्नायिकाहित वाङ्मधुरं देहि मे शशिभृत् ॥ (हर हर)

ராகம்......   தாளம் — சாபு (அட)

பல்லவி

ஹரஹர வ்ருஷ துங்க ஹரமே துரிதம் தயாபாங்க
பரமேச்வர ஸதய பயபங்க பாஹிமாம்ப்ருஹதீசலிங்க-ஹரஹர

அ-பல்லவி

கனகாசலசாபதர அநலாநீலஹரிசர
கனபுரத்ரய மதஹர காலித ஜயாய சக்திகீர்த்திபர-ஹரஹர

சரணம்

பதித யமமதசோஷண ரதிபதிகர்வபஞ்ஜன
அதிசலித ரங்கதரளமன அந்தககஜஸுதமன
நாகபூஷாபூஷித யோகித்யேய சாஹநுத
த்யாக ப்ருஹந்நாயிகாஹித வாங்மதுரம் தேஹி மே சசிப்ருத்-
ஹரஹர

रागम् – आहिरि]   [तालम् – आदि

(पल्लवि)

[1] अम्बुजाक्षि [2] संततमव अमृतकटाक्षि ।
शम्बरारिजीवनदायिनि सदये राजराजेश्वरि ॥ (अम्बुजाक्षि)

चरणम् (१)

अब्जमुखभासुरे अब्जधनूभ्रूयुगले ।
अब्जचञ्चलनेत्रे अब्जकंबुशोभिते ।
अब्जकोशघनस्तनि अब्जललितरोमलतिके ।
अब्जारुणतनुकान्ते अब्जमधुराम्बु वाणिदे ॥ (अम्बुजाक्षि)

(२)

अब्जासनपूजिते अब्जलोचनसोदरि ।
अब्जगतिगामिनि अब्जहारधारिणि ।
अब्जतरुउदारे अब्जषट्पदसदात्रे ।
अब्जभूषणभूषिते अब्जत्रासससहिते ॥ (अम्बुजाक्षि)

---

१. अम्ब रक्षि, २. संतता मज.

(३)

अब्जजवहारिवाहने अब्जमणितरले ।
अब्जतपनप्रतापे अब्जपानप्रमत्ते ।
अब्जकुशलनृत्तलोले अब्जेत्रारोग्यप्रदे ।
अब्जहर त्यागेशदयिते अब्जमित्रान्वयशाहनुते । (अम्बुजाक्षि)

ராகம் — ஆஹிரி
தாளம் — ஆதி

ஆ — ஸ . ரி . ஸ . க . ம . ப . த . நிஸ்.
அ — ஸ் . நி . தா . ப . ம . க . ரி . ஸ.
8-வது மேளஜன்யம்

பல்லவி

அம்புஜாக்ஷி ஸந்ததமவ அம்ருத கடாக்ஷி
சம்பராரி ஜீவனதாயினி ஸதயே ராஜராஜேச்வரி
அம்புஜாக்ஷி

சரணம் 1.

அப்ஜமுகபாலஸ்தரே அப்ஜதநூப்ருயுகளே
அப்ஜசஞ்சலநேத்ரே அப்ஜகம்புசோபிதே
அப்ஜகோசகனஸ்தநி அப்ஜலளிதரோமலதிகே
அப்ஜாருணதநுகாந்தே அப்ஜமதுராபு வாணிதே
அம்புஜாக்ஷி

2

அப்ஜாஸனபூஜிதே அப்ஜலோசனஸோதரி
அப்ஜகதிகாமினி அப்ஜஹாரதாரிணி
அப்ஜதருஉதாரே அப்ஜஷட்ரஸதாத்ரே
அப்ஜபூஷணபூஷிதே அப்ஜவாஸ ஸஹிதே அம்புஜாக்ஷி

3

அப்ஜஜவஹாரிவாஹனே அப்ஜமணிதரளே
அப்ஜதபனப்ரதாபே அப்ஜபானப்ரமத்தே
அப்ஜகுசலந்ருத்தலோலே அப்ஜேவாரோக்யப்ரதே
அப்ஜஹரத்யாகேசதயிதே அப்ஜமித்ரான்வயசாஹநுதே
அம்புஜாக்ஷி

रागम् – धन्यासि] [तालम् – शापु (अट)

(पल्लवि)

भावये पञ्चनदीशं भवभयनाशम् ।
देवं धर्मसंवर्धनीशं दीनसुरतरुं विश्वेशम् ॥ (भावये)

चरणम् (१)

खण्डशशिमण्डनं गर्वितसुरखंडनम् ।
दण्डधरकुञ्जरदलने पञ्चाननं, शशिवह्नि-
चण्डकरलोचनं हराङ्गद-
कुण्डलीशभूषणं अनलाच्युतकांडं हिमाद्रिको-
दण्डं स्मरभञ्जनं पुण्डरीकाजिनवसनम् ॥ (भावये)

(२)

चण्डिकामनोहरं संततवेदान्तविहारम् ।
खंडपरशुदोर्दण्डं पिण्डीकृतत्रिपुरं नन्दितवेतण्ड-
तुण्डकुमारं मुनिसुराखण्डलनुतिसादरं कुक्षिनिहित
पुण्डरीकसंभवाण्डमहावृषकाण्डं दयासागरं शंकरम् ॥
(भावये)

(३)

पाण्डुराभासुराङ्गं पापतिमिरपतङ्गम् ।
चण्डविक्रमशाहेन्द्रस्वान्तसिताब्जभृङ्गम् ।
गङ्गाजटामण्डलशुभोत्तमाङ्गं सह्यसुता
काण्डक्रीडद्विहङ्गं संततमृकण्डुतनयमा-
र्कण्डेयभयभङ्गं पाण्डवप्रियत्यागजप्येशलिङ्गम् ॥ (भावये)

ராகம் — தந்யாஸி
தாளம் — சாபு
(அட)

ஆ — ஸ. க. ம. ப. நி. ஸ்.
அ — ஸ். நி. த. ப. ம. க. ரி. ஸ.
8-வது மேள ஜன்யம்

பல்லவி

பாவயே பஞ்ச நதீசம் பவபயநாசம்
தேவம் தர்மஸம்வர்தனீசம் தீனஸுர தரும் விச்வேசம்
பாவயே

சரணம் 1.

கண்டசசி மண்டனம் கர்விதஸுர கண்டனம்
தண்டதர குஞ்ஜரதளனே பஞ்சாநநம் சசிவஹ்நி
சண்டகர லோசனம் ஹராங்கத

குண்டலீச பூஷணம் அனலாச்யுதகாண்டம் ஹிமாத்ரிகோ
தண்டம் ஸ்மர பஞ்ஜனம் புண்டரீகாஜின வஸனம்
பாவயே

2

சண்டிகா மனோஹரம் ஸந்தத வேதாந்த விஹாரம்
கண்ட பரசுதோர் தண்டம் பிண்டீக்ருத த்ரிபுரம்
நந்திதவேதண்ட
துண்ட குமாரம் முனிஸுரா கண்டலநுதி ஸாதரம் குக்ஷி
நிஹித புண்டரீக ஸம்பவாண்ட மஹாவ்ருஷ காண்டம்
தயாஸாகரம் சங்கரம்
பாவயே

3

பாண்டுராபாஸுராங்கம் பாபதிமிரபதங்கம்
சண்டவிக்ரம சாஹேந்த்ர ஸ்வாந்த ஸிதாப்ஜப்ருங்கம்
கங்காஜடாமண்டல சுபோத்தமாங்கம் ஸஹ்யஸுதா
காண்டக்ரீடத்விஹங்கம் ஸந்ததம்ருகண்டு தநயமார்
கண்டேய பயபங்கம் பாண்டவப்ரிய த்யாக
ஜப்யேசலிங்கம்
பாவயே

रागम् – पन्तुवराlि] [तालम् - आदि

(पल्लवि)

त्रिपुरसुन्दरि पाहि त्रिमूर्तिरूपे । (त्रिपुरसुन्दरि)

चरणम् (१)

पद्मालये सततं पद्मसंभवमुनिहृत्-
पद्ममधुकरि मञ्जुपद्मकरादृते ।
पद्मास्त्रशतकोटिपद्मरुचिभासुरे ।
पद्मगन्धि जननि मे मनःपद्मे विहर ॥ (त्रिपुरसुन्दरि)

(२)

हरिसोदरि तुङ्गहरिवाहने चारु-
हरिमध्यशोभने नित्यहरिहयार्चिते ।
हरिश्यामले घनहरिवेणिमण्डिते ।
हरिणनयने भयहारिणि परदेवते ॥ (त्रिपुरसुन्दरि)

ĀPASTAMBA SMĀRTA PRAYOGA

By

VENJARLA SINGAYA BHATTA

Edited by :

V. SUNDARA SARMA

&

S. SUNDARESA SOMAYAJI

T. M. S. S. M. Library,

THANJAVUR

Published by :

O. A NARAYANASWAMI, B. A., B L.,

Honorary Secretary,

FOR THE ADMINISTRATIVE COMMITTEE OF THE

TANJORE MAHARAJA SERFOJI'S SARASVATI MAHAL LIBRARY, THANJAVUR.

A. D. 1964 Śaka 1885.

Price Rs. 1-50

PRINTED AT THE SRI VANI VILAS PRESS, SRIRANGAM.

भूमिका

अनादेः कालात् बहुधा वर्धमानो वैदिकसंप्रदायः भारतेस्मिन् सर्वैरादृियमाणस्सर्वेषामपि जनिमतामैहिकामुष्मिकसत्फलैकनिदानं विद्वज्जनसमुदायैकवेद्यस्सन् सर्वेषामादरपात्रं विराजतेऽद्यापि । कर्मभूमित्वेन प्रथितेऽस्मिन् भरतखण्डे कर्मानुष्ठानस्य कियत्प्राधान्यं समस्तीति न पृथङ्निर्देशमपेक्षते । अस्मदीयस्य देशस्य कर्मभूमित्वप्रथा तस्य वैदिकसंप्रदायस्यानादिसिद्धतां तस्यावश्यादरणीयतां च सम्यक् व्याकरोति । "निराश्रमी न तिष्ठेत दिनमेकमपि द्विजः" इति बोधयन्ती दक्षसंहिता चास्मानाश्रमाश्रयान् करोति।

आश्रमाश्रयणे च तत्तदाश्रमोचितकर्मणां स्वनुष्ठानेनैव सार्थक्यं संपादनीयं भवति तत्तदाश्रमस्य । अन्यथा धर्मलोप एव । भारतनिवासिनां सनातनसंप्रदायैकशरणानामस्माकं श्रुतिस्मृतिवृद्धसंप्रदायान् विना न किञ्चिदस्ति मार्गदर्शकं कर्मानुष्ठानस्य । अतो जनिमतामस्माकं जन्मसाफल्यसिद्धये निराक्षेपमवश्यानुष्ठेयानां कर्मणां ज्ञानायोपयुक्ताः श्रुतिस्मृतिवृद्धसम्प्रदायादयः नित्यपूज्या इत्यत्र नास्ति सन्देहः । तान् सम्यक् समालोच्य विभिन्नवर्गीयाणां कर्मानुष्ठानसौकर्याय सूत्रादिकान् विरचय्य आपस्तम्बाश्वलायनादयो बहवो महर्षयः वैदिकसंप्रदायस्य जीवातुभूता महदुपकुर्वन्ति स्म ।

तैश्च दीर्घदर्शिभिर्महर्षिभिर्विरचितानि श्रौतस्मार्तसूत्राणि तदितराणि च विपुलव्याख्यासापेक्षाणि सामान्यजनदुरूहाणि क्वचिदतिजटिलानि च दृश्यन्त इत्येतद्विज्ञजनविदितमेव । कर्मानुष्ठानप्रयोगमधिकृत्य सम्यग्ज्ञानविरहः क्रमेण सर्वात्मना कर्मपरित्यागस्य मार्गमेव दर्शयेत् । अतस्तादृशदुःस्थितिपरिहारपूर्वकं सानातनिकधर्मव्यवस्थापनं मनसिकृत्य श्रुतिस्मृतिसूत्रादिकान् सत्संप्रदायांश्च संयक् परिशील्य पण्डिताः वैदिकसंप्रदायप्रमाणभूताः केचित् कर्मसु मन्त्रप्रयोगतन्त्रप्रधानान् प्रयोगग्रन्थान् रचयन्ति स्म । तादृशप्रयोगग्रन्थेषु बहुष्वन्यतमोऽयं ग्रन्थः "आपस्तम्बस्मार्तप्रयोगः" वेङ्कलशिङ्गयभट्टप्रणीतः आपस्तंबीयसूत्रावलम्बिनामान्ध्राणां प्रयोगजातं व्याकरोति ।

तदेतद्ग्रन्थकर्तुर्वेङ्कलशिङ्गयभट्टस्य देशकालादिनिर्णये कृतः प्रयत्नस्सर्वोपि विफलस्सञ्जातः। आपाततः तस्य नामधेयपरिशीलनेनेदं ज्ञायतेऽयमान्ध्रप्रदेशज इति। अनेन प्रणीता बहवो ग्रन्थाः प्रयोगविषया अन्येऽप्युपलभ्यन्ते मुद्रिताः । अयमेकः परममुद्रित आसीत् । ग्रन्थस्यास्य ताळपत्रात्मिका मातृका त्वेतद्ग्रन्थालयस्थानां विद्वद्वरेण्यानां श्रीमतां सुन्दरेश्वरसोमयाजिनां पितृव्यैः कीर्तिशेषैः श्रीमद्भिः चन्द्रशेखरशास्त्रिवर्यैस्स्वहस्तलिखिता ग्रन्थ-

लिप्यङ्किता रक्षिता चाऽभूत् । वंशपरंपरागताया मातृकायास्तस्याः पुत्रिका च [1] ग्रन्थालयेऽस्मिन् विद्यमाना (Copied Volume) 1062 संख्याता मुद्रणस्यास्य मूलम् ।

श्रौतस्मार्तविहितनित्यनैमित्तिक कर्मानुष्ठानद्वारा जन्मसाफल्यलिप्सूनामस्माकमेतादृश-ग्रन्थजातमतिमात्रमुपकरोतीति नाऽतिवचनम् । सत्कर्मणां व्यवस्थीकरणं दुष्कर्मणां निरा-करणं च श्रुतेस्तथा स्मृतेरेव सुष्ठु ज्ञायते । श्रुतितत्त्वार्थविदां नैकस्मृतिप्रवर्तकानां महर्षीणां प्रज्ञानुभववशादुत्पन्नोऽयं वैदिकसंप्रदायः न कदापि फलप्रदाने वैपरीत्यं भजेत् । "एकः शब्दस्सुष्ठु प्रयुक्तः स्वर्गे लोके कामधुक् भवती"ति वैयाकरणाः प्रवदन्ति । तथैव एकं कर्म स्वनुष्ठितं स्वर्गे लोके कामधुग्भवेदित्यत्र नास्ति सन्देहलेशस्याप्यवकाशः । शब्दप्रयोगस्यैव स्वर्गे लोके कामधुक्त्वरूपं फलं यदि स्यात्, तर्हि कर्मणस्ततोप्यधिकमेव फलं वक्तुमुचितं स्फुरति । आश्रमाश्रयाणामस्माकं तत्तदाश्रमोचितान्यवश्यमनुष्ठेयानि कर्माणि नित्यनैमित्तिकानि श्रुतिस्मृतिचोदितानि वर्तन्ते । तत्तादृक्कर्मानुष्ठानतत्परस्य जनिमतः कर्मविषयकपरिज्ञानस्या-ऽऽवश्यकत्वात् श्रौतग्रन्थपठनादिकमवश्यकर्तव्यतामेति । तेनाध्ययनं नित्यसिद्धं भवति । अधीतानां च वेदादीनां अध्यापनादिनिर्वहणे एव सार्थकता सिद्ध्यत्यध्ययनस्येति सिद्धं तात्त्विककर्मिणः पुरुषस्य मुक्तिः ऋणत्रयात् । ऋणत्रयविमुक्तस्य च ज्ञानवैराग्यसंपन्नस्य पारमार्थिकचिन्तापरस्य सिद्धा नित्यनिरतिशयानन्दपरब्रह्मतादात्म्यरूपा मुक्तिरित्यलं विस्तरेण ।

मुद्रणावसरोद्भूतानि प्रामादिकानि शुद्धिपत्रे शोधितानि वर्तन्ते । यद्यन्यान्यपि भवेयुस्तानि पण्डितप्रवरैरावेदनीयानि प्रार्थ्यन्ते समनन्तरमुद्रणावसरे शोधनाय । परिमित्या स्वल्पोप्ययं ग्रन्थः पण्डितप्रकाण्डानामादरपात्रं भवेदित्याशास्यते ॥

इति शम्

तञ्जापुरी,
शोभकृत्कार्तिक-शुक्ल-चतुर्दशी,
29—11—1963.

वि. सुन्दरशर्मा
यस्. सुन्दरेशसोमयाजी

1. The Thanjavur Maharaja Serfoji's Sarasvati Mahal Library, Thanjavur.

(३)

राजराजेश्वरि जय राज्यदायिनि उडु
राजबिम्बानने कविराजपूजिते ।
राजराजप्रियत्यागराजप्रियसहिते [1] एक-
राजसुतशाहमहाराजविनुते ॥ (त्रिपुरसुन्दरि)

ராகம் — பந்துவராளி
தாளம் — ஆதி

ஆ - ஸ. ரி. க. ம. ப. த. நி. ஸ்.
அ - ஸ். நி. த. ப. ம. க. ரி. ஸ.
51-வது மேளம்

பல்லவி

த்ரிபுரஸுந்தரி பாஹி த்ரிமூர்த்திரூபே த்ரிபுரஸுந்தரி

சரணம் 1.

பத்மாலயே ஸததம் பத்மஸம்பவமுநிஹ்ருத்
பத்மமதுகரி மஞ்ஜு பத்மகராத்ருதே
பத்மாப்த சதகோடி பத்மருசி பாஸுரே
பத்மகந்தி ஜனனி மே மன:பத்மே விஹர த்ரிபுரஸுந்தரி

2

ஹரிஸோதரி துங்க ஹரிவாஹனே சாரு
ஹரிமத்ய சோபனே நித்யஹரி ஹயார்சிதே
ஹரிச்யாமளே கனஹரிவேணி மண்டிதே
ஹரிணநயனே பயஹாரிணி பரதேவதே த்ரிபுரஸுந்தரி

3

ராஜராஜேச்வரி ஜயராஜ்யதாயினி உடு
ராஜபிம்பானனே கவிராஜபூஜிதே
ராஜராஜப்ரிய த்யாகராஜப்ரியஸஹிதே ஏக
ராஜஸுதசாஹமஹாராஜவினுதே த்ரிபுரஸுந்தரி

रागः – मोहनम्] [तालः – एक

(पल्लवि)

आनन्दवल्लि मदनजीवनामृतवल्लि ।
भक्तजनसंतानवल्लि मां पाहि ॥ (आनन्दवल्लि)

---

१. "एकराजसुत" என்று தன் தகப்பனாரின் பெயரைக் குறிப்பிடுகிறார். சாஹமஹாராஜரின் தகப்பனாரின் பெயர் "ஏகராஜா" (ஏகோஜி).

चरणम् (१)

सेनानिजननि ईशानवरमानिनि ।
गाने कोकिलवाणि दानेभगामिनि ॥ (आनन्दवल्लि)

(२)

बालेन्दुशेखरि मलयाद्रिकुमारि ।
कालि बिम्बाधरि कंबुकण्ठधरि ॥ (आनन्दवल्लि)

(३)

सुरमुनिसेविते सरसिजभवनुते ।
वरदेवविश्वहिते परदेवते ॥ (आनन्दवल्लि)

(४)

मञ्जुभाषिणि त्यागतञ्जेशमानिनि ।
कञ्जाक्षि रुद्राणि गौरि भवानि ॥ (आनन्दवल्लि)

ராகம் — மோஹனம்
தாளம் — ஏக

ஆ - ஸ . ரி . க . ப . த . ஸ் .
அ - ஸ் . த . ப . க . ரி . ஸ .
29-வது மேளஜன்யம்.

பல்லவி

ஆனந்தவல்லி மதன ஜீவனும்ருதவல்லி
பக்தஜனஸந்தானவல்லி மாம் பாஹி ஆனந்தவல்லி

சரணம். 1

ஸேநாநிஜனனி ஈசானவரமானினி
கானே கோகிலவாணி தானேபகாமினி ஆனந்தவல்லி

2

பாலேந்துசேகரி மலயாத்ரிகுமாரி
